13th March 1963]

(b) if so, the grade of teachers who will have to handle such classes?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (a) Yes, the matter is under consideration.

(b) Secondary grade teachers will normally handle English classes.

அமைச்சரின் சுற்றுப்பயணம்

*217. கேள்வி—திரு. எஸ். முருகையன் : (திரு. வெ. கிருஷ்ணமூர்த்தி சார்பாக) கனம் நிதி அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

கனம் செய்தித் துறை அமைச்சர் 1962 டிசம்பர் மாதத்தில் பிரயாணம் செய்த மைல்கள் எவ்வளவு ? அது சம்பந்தமாக அவர் வாங்கிய அலவன்ஸ் எவ்வளவு ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : During the period the Minister travelled 2,890 miles and drew a sum of Rs. 1,585.40 nP. towards travelling allowance and daily allowance.

Teachers (transfer)

* 218 Q.—SRI S. MADHAVAN : Will the Hon. the Minister for Finance be pleased to state whether there is any Government Order directing that husband and wife serving as teachers in a village should not be separated?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : Yes, the husband and wife should generally be posted in the same station. However, this is not to be construed as fettering the discretion of the authorities to transfer either the husband or the wife to another station for administrative reasons.

திரு. எஸ். மாதவன் : பஞ்சாயத்து யூனியன் பள்ளிகளிலுள்ள ஆசிரியர்களை, பனிஷ்மெண்ட் கொடுப்பதற்காக, கணவன் மனைவியைப் பிரித்து வைப்பதாக ஒரு பாலிஸி இருக்கிறது. இது அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டதா ? அப்படி செய்யக்கூடாது என்று அரசாங்கம் உத்தரவிடுமா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : கணவன், மனைவியைப் பிரித்துத் தான் பனிஷ்மெண்ட் கொடுக்கவேண்டும் என்பதில்லை. பனிஷ்மெண்ட் கொடுக்கும்பொழுது, சில சமயங்களில், கணவன் மனைவியைப் பிரித்து வைப்பது தவிர்க்க முடியாததாகப் போகிறது.

திரு. ஆ. துரையரசன் : அதிகாரிகளின் சொந்த விருப்பு வெறுப்பின் காரணமாக இதைப் போல் மாற்றப்படுவது பற்றி அரசினருக்குப் புகார்கள் வந்திருக்கின்றனவா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : அவ்வாறு புகார்கள் வரவில்லை.

திரு. டி. எல். சசிவர்ணத் தேவர் : குடும்பக் கட்டுப்பாடு திட்டத்தை அமுல் நடத்துவதற்காக இந்த மாதிரி தம்பதிகளைப் பிரித்து வைக்கிறார்கள் என்று சொல்லுகிறார்களே, அது உண்மையா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : குடும்பக் கட்டுப்பாடு வேறு விஷயம். அதற்காகத் தம்பதிகளைப் பிரிப்பது பெரிய பாவம் என்று நான் சொல்லுவேன்.

[13th March 1963

புலவர் கா. கோவிந்தன் : இப்பொழுது பஞ்சாயத்து அளவிலே பள்ளிகள் இருப்பதால், பஞ்சாயத்துத் தலைவர்கள் விருப்பப்படி ஆசிரியர்களை மாற்றுவது என்ற நிகழ்ச்சி பரவலாக நடைபெறுகிறது. காரணம் இல்லாமல் மூன்று ஆண்டுகளுக்குள்ளாக ஆசிரியர்களை மாற்றக் கூடாது என்ற விதியை அரசாங்கம் அமுல் நடத்த முன்வருமா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : புதிதாக அமுல் நடத்த வேண்டியதில்லை. காரணம் இல்லாமல் மூன்று ஆண்டுகளுக்கு முன்னர் ஆசிரியர்களை மாற்றக் கூடாது என்ற விதி இப்பொழுதும் இருக்கிறது. தகுந்த காரணங்கள் இருந்தால் மாற்றுவது தவிர்க்க முடியாத விஷயம்.

திரு. கி. இரா. சம்பந்தம் : எப்பொழுதுமே ஆண்டின் நடுவில் மாற்றுவது கிடையாது. இப்பொழுதெல்லாம் ஆண்டின் நடுவிலே மாற்றுவதினாலே, ஆசிரியர்கள் அவர்கள் குழந்தைகளைப் படிக்க வைப்பதற்குக் கஷ்டப்படுகிறார்கள். குடும்பத்தையும் மாற்ற வேண்டிய நிலையில் இருக்கிறார்கள். வழக்கம்போல், ஆண்டு முடிவில் மாற்றக் கூடிய விதியைக் கடைப்பிடிக்க வேண்டுமென்று எல்லாப் பஞ்சாயத்து யூனியன்களுக்கும் சர்க்கார் அறிவிப்புக் கொடுப்பார்களா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : அந்த விதி அனுசரிக்கப்பட்டு வருகிறது. ஆனால் வேறு காரணங்களினால் ஆண்டு நடுவிலே மாற்ற வேண்டியிருக்கிறது. அதற்கு ஆசிரியர்களே காரணமாக இருக்கலாம். அல்லது பஞ்சாயத்து யூனியன்கள் காரணமாக இருக்கலாம். எத்தனையோ காரணங்கள் இருக்கலாம்.

திரு. ஆர். ரங்கசாமி : ஆசிரியர்களிடையே கணவன் மனைவி தகராறு ஏற்பட்டு, ஊரிலே இருப்பவர்கள் அதைப் பார்த்து நடக்காமல் இருப்பதற்கு அவர்களை வேறு இடங்களுக்கு மாற்ற சர்க்கார் ஏற்பாடு செய்யுமா ?.

கனம் திரு. எம். பக்தவத்சலம் : அப்படிக்கூட எனக்குப் புகார் வருவது உண்டு. (சிரிப்பு). அவர்களிடையே மனஸ்தாபம் இருப்பதன் காரணமாக, அவர்கள் பள்ளிக்கூடம் வந்தால் பாடம் சொல்லிக்கொடுப்பதில்லை என்றும், இந்த சண்டையேதான் நடந்துகொண்டிருக்கிறது என்றும் புகார்கள் வந்திருக்கின்றன.

SRI C. CHIRANJEEVULU NAIDU : Will any orders be issued to the Panchayat Union Councils asking them to consult the Education Department, i.e., the Deputy Inspectors of Schools, in the matter of transfers, as was being done in the erstwhile District Boards and Local Bodies?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : Yes, Sir; such an order had been in force. But it was not always observed.

திரு. அ. ராகவ ரெட்டி : அம்மாதிரி கல்வி இலாகாவை முன்கூட்டி யோசிக்காமல் மாறுதல் செய்வதற்கு அவர்களுக்கு அதிகாரம் கொடுத்திருப்பதால், ஏராளமான மாறுதல்களை அவர்களாகவே அரசியல் காரணங்களுக்காகவும், மற்ற காரணங்களுக்காகவும் செய்கிறார்கள். அதைத் தடுக்க சர்க்கார் முயற்சி எடுக்குமா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : பஞ்சாயத்து ஆலோசனைக் குழுவிலே இந்தப் பிரச்னையைப் பற்றிக் குறிப்பிட்டால், எல்லா பஞ்சாயத்து யூனியன் தலைவர்களையும் கலந்து, என்ன மாறுதல்கள் செய்ய வேண்டுமென்று ஆலோசிக்கலாம்.

Southern Zonal Council

* 219 *Q.*—SRI V. SANKARAN : Will the Hon. the Chief Minister be pleased to state the decisions arrived at by the Southern Zonal Council at its meeting at Kanyakumari in December 1962?